செ.வெ.எண்:23 நாள்:10.10.2017

**கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டத்தில் காலியாக உள்ள கிராம உதவியாளர் பணியிடத்திற்கான நேர்காணல் அறிவிப்பு.**

கரூர் மாவட்ட வருவாய் அலகு, கரூர் மாவட்டம் மண்மங்கலம் வட்டத்திற்குட்பட்ட புஞ்சைபுகழூர் தெற்கு, வேட்டமங்கலம் கிழக்கு, ஆகிய 2 (இரண்டு) வருவாய் கிராமங்களில் காலியாக உள்ள 2 கிராம உதவியாளர் பணியிடங்கள் நேர்காணல் மூலம் இனச் சுழற்சியின் அடிப்படையில் நிரப்பப்பட உள்ளது. அதன்படி மேற்குறிப்பிட்ட வருவாய் கிராமங்களைச் சேர்ந்த மற்றும் அதனை சுற்றியுள்ள குக்கிராமங்களைச் சேர்ந்த குறைந்த பட்சம் 5ம் வகுப்பு தேர்ச்சி மற்றும் அதற்கு மேல் வகுப்புகளில் தேர்ச்சி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் வயது வரம்பு 01.07.2017 ம் தேதியில் 21 வயது நிரம்பியவராகவும் அதிக பட்சம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் 35 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும். பிற்படுத்தபட்டோர் (முஸ்லீம்) மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு 32 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும். இதர பிரிவினர் (பொது பிரிவினர்) 30 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும். புஞ்சைபுகழூர் தெற்கு கிராமத்தில் உள்ள கிராம உதவியாளர் காலியிடம் பொதுபிரிவினருக்கு (பொது) (முன்னுரிமையற்றவர்) ஆகும். வேட்டமங்கலம் கிழக்கு கிராமத்தில் உள்ள கிராம உதவியாளர் காலியிடம் ஆதிதிராவிடர் (முன்னுரிமையற்றவர்) (பெண்கள்) (ஆதரவற்ற விதவை) ஆகும். மேற்படி தகுதிகளுடன் கிராம உதவியாளராகப் பணிபுரிய விருப்பம் உள்ளவர்கள், நேர்முகத் தேர்விற்கு கீழ்க்கண்ட ஆவணங்களுடன் வரவேண்டும்.

1. அசல் பள்ளிச் சான்று
2. இருப்பிடச்சான்று
3. குடும்பஅட்டை/ வாக்காளர் அடையாள அட்டை
4. சாதிச் சான்றிதழ்
5. வயதிற்கு ஆதாரமான சான்று ( பிறப்புச்சான்று/பள்ளிச் சான்று)
6. சம்பந்தப்பட்ட காவல் துறை ஆய்வாளரிடம் பெறப்பட்ட குற்றம் ஏதும் புரியாதவர் என்பதற்கான சான்று/நன்னடத்தைச் சான்று.
7. உடல் தகுதிச் சான்று
8. வேலை வாய்ப்பக அடையாள அட்டை

மேலும் விண்ணப்பதாரருக்கு தமிழில் எழுதப்படிக்க தெரிந்திருக்க வேண்டும். இரு சக்கர வாகனம் ஓட்டத்தெரிந்திருக்க வேண்டும். திருமணம் ஆனவராக இருந்தால் ஒரு திருமணத்திற்கு மேல் திருமணம் செய்யாதவராக இருக்க வேண்டும். மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருக்க வேண்டும்.

மேற்கண்ட தகுதியுடையவர்கள் தங்களது அசல் சான்றிதழ்களையும் சான்றொப்பம் இடப்பட்ட 2 ஆவண நகல்களையும் மற்றும் 2 புகைப்படங்கள் எடுத்துக் கொண்டு நேர்காணலில் கலந்து கொள்ளலாம். நேர்காணல் வரும் அக்டோபர் 31.10.2017 அன்று காலை 11.00 மணிக்கு மண்மங்கலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் எனவும் மண்மங்கலம் வட்டாட்சியர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கரூர்.